1975 நவம்பர் 12]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

அறிவிப்பு.

(3) ஓர் உரிமை மீறல் பிரச்னையை அடுத்த கூட்டத் தொடரில் எடுத்துக்கொள்வதுகுறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்கள் விதி 184-ன்கீழ் ஒரு உரிமை மீறல் பற்றிய பிரச்னையைக் கொண்டுவந்துள்ளார்கள். அதைப் பரிசிலித்துப் பிறகு எடுத்துக்கொள்ளலாம் என்று கருதுகிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: உரிமை மீறல் பிரச்னையைப் பிறகு எடுத்துக்கொள்ளலாம் என்றால் இன்றைக்குக் கடைசி நாள்; பிறகு என்று சொன்னால் இன்றைக்கேயா அல்லது பிறகா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சட்டசபை இதோடு முடிவு அடைந்துவிடாது. அடுத்த சிட்டிங் இருக்கும். போது பார்த்துக்கொள்ளலாம். Let me consider it. Let me go through it and consider it.

* THIRU A. SUBRAMANIAM: Mr. Deputy Speaker, Sir, the Proviso to Rule 184 of the Assembly Rules says:

"Provided that in respect of a matter of privilege arising during the sitting of the House, the Speaker may waive such notice."

Again, Sir, Rule 186 says:

"A matter of privilege must be raised after the questions and before the list of the business for the day is entered upon:

Provided that a matter of privilege arising during the sitting of the House shall be entitled to immediate precedence over all other business."

அதனால் இந்த இடத்திலேயே—

Sir, the spirit of all these rules is that an issue of privilege should get precedence over all other business. That is because the privilege of the House and the privilege of every Member of this House are sacrosanct. They get precedence. They are more sacrosanct, more sanctified than any other business. That is the spirit of these rules. So, I would request, Mr. Deputy Speaker, to take up this question immediately. It need not take much time to consider this matter because the issue of this privilege motion arose during the sitting. It is a very simple matter. It is not a very detailed matter. There is no need for any enquiry. In fact, it is a very simple matter. One does not know if and when the Assembly will meet again. The purpose of the motion will not be served, if it is postponed. So, I would request that it be taken up even now before any other business is taken up.

MR. DEPUTY SPEAKER: I would say that as the Chair, I have to go through all these things and find out whether a *prima facie* case has been made out or not. For that, I require some more time. I must know what question the Hon. Member has given and what answer the Hon. Minister has given. To know all these things, I have to go through the records. What question the Hon. Member has given to the department, I have to find out. All these things are there. Therefore, I will take it up after considering all these things.

(3) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

(அ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள முந்திரிப் பருப்புத் தொழிற்சாலைகள் மூடப்பட்டது குறித்தும், தொழிலாளர்கள் பாதிப்பும் குறித்தும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேரள அரசு அந்த மாநிலத்திலிருந்து முந்திரி அனுப்புவதைத் தடை செய்துள்ள காரணத்தால், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள எல்லா முந்திரித் தொழிற்சாலைகளும் மூடப்பட்டு விட்டதால், 40,000-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலையிழந்து, அதனால் அம்மாவட்டத்திலுள்ள தொழிலாளர்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க வேண்டும் என்று பேரவையின் 42-ம் விதியின் கீழ் திரு. ஜே. ஜேம்ஸ் அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம்